 a. Nomination Form and Declaration Form.
 b. Personal Information, Declaration and Undertaking (PDU Form) as prescribed by RBI.
 c. The extract of all relevant Acts, Rules, Regulations and Notifications.

In case you have any queries or issues regarding e-voting, you may refer the Frequently Asked Questions ("FAQs") and e-voting manual available at https://evoting.kfintech.com under help section or call on 1800 309 4001.

All grievances connected with the facility for voting by electronic means may be addressed to Mr. Mohan Banothu, Deputy Manager, KFin Technologies Limited, Selenuim Building, Tower-B, Plot Nos. 31 & 32, Financial District, Nanakramguda, Serilingampally, Hyderabad - 500032 or write an email to evoting@kfintech.com or call 1800 309 4001.

**By order of the Board of Directors**
**For UNION BANK OF INDIA**

Sd/-
**(S. K. Dash)**
Company Secretary

**Place: Mumbai**
**Date: 26.06.2024**

TAMILTH Kancheepuram 1 Regional_02 214524 HT221862

Newspaper: Hindu Tamizh Thisai
Language: Tamil
Edition: Chennai
Date of Publication: June 27, 2024



### போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு

# செங்கை, திருவள்ளூர், காஞ்சியில் விழிப்புணர்வு பேரணி

● செங்கல்பட்டு

போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு செங்கை, திருவள்ளூர், காஞ்சியில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தனியார் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட போதை விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் தொடங்கி வைத்தார்.

வெண்பாக்கம் பள்ளியில் இருந்து புறப்பட்ட பேரணியில் மாவட்ட ஆட்சியர் கலந்துகொண்டு, மாணவ மாணவிகளுடன் 2 கிமீ தூரம் நடந்து வந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இப்பேரணி செங்கல்பட்டு திண்டிவனம் சாலை வழியாக சென்று ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவு பெற்றது.




போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் தலைமையில் செங்கல்பட்டில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் நாராயண சர்மா, மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அனாமிகா ரமேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அறிவுடைநம்பி, உதவி ஆணையர் (கலால்) இரா.ராஜன் பாபு, மாவட்ட கல்வி அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் உதய குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திருவள்ளூரில் ஆட்சியர் பிரபு சங்கர் தொடங்கி வைத்த விழிப்புணர்வு பேரணி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி, சென்னை -திருப்பதி தேசிய நெடுஞ்சாலை வழியாக நேதாஜி தெரு சாலை சந்திப்பு பகுதியில் நிறைவு பெற்றது.

இந்நிகழ்வுகளில், திருவள்ளூர் எஸ்பி சீனிவாசபெருமாள், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆயுஷ் குப்தா, உதவி ஆணையர் (கலால்) ரங்கராஜன், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு டிஎஸ்பி அனுமந்தன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு அலுவலர் நிஷாந்தினி பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஆட்சியர் கலைச்செல்வி தலைமை தாங்கினார். இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கி.சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில்

# சூரிய ஒளி தகடுகள் பொருத்தி ரூ.40 லட்சத்தில் கட்டப்பட்ட புதிய கூட்ட அரங்கம்

**▶ தினமும் 312 யூனிட் மின்சாரம் உற்பத்தி**

● சென்னை

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் சூரிய ஒளி தகடுகள் பொருத்தி ரூ.40 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள புதிய நினைவரங்கம் மற்றும் கூட்ட அரங்கை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேற்று திறந்து வைத்தார்.

இந்த சூரிய ஒளி தகடுகள் மூலம் தினசரி 312 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு மாதம் ரூ.80 ஆயிரம் வரை மின்கட்டணத்தைச் சேமிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய பணியாளர் சங்கம் மற்றும் காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கடலூர் மாவட்டங்களின் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றி பணியின் போது உயிரிழந்த ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் கலந்து கொண்டு, 5 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மேலும், கடந்த ஆண்டு சிறப்பாகச் செயல்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட சிறந்த சங்கங்களுக்கு பரிசுத் தொகை வழங்கி கவுரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை செயலர் கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என்.சுப்பையன், கூடுதல் பதிவாளர்கள் ஜே.விஜயராணி, எஸ்.சுப்ரமணியன், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக மண்டல இயக்குநர் எம்.சுப்ரமணியன் மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து, கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில் ரூ.48 லட்சம் செலவில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நினைவரங்கம் மற்றும் வானவில் கூட்ட அரங்கையும் அமைச்சர் பெரியகருப்பன் திறந்துவைத்தார்.

இந்த அரங்கின் மேற்கூரையில் 78 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் சூரிய ஒளி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் தினமும் 312 யூனிட் மின்சாரம் என்ற அடிப்படையில் ஒரு மாதத்தில் 9,300 யூனிட் மின்சாரம் கிடைக்கும்.

இதனால் மாதம் ரூ.80 ஆயிரம் வரை மின் கட்டணம் சேமிக்கப்படும் என்று கூட்டுறவுத் துறை அறிவித்துள்ளது.

## பவுஞ்சூர் பேருந்து நிலையம் அருகே நாம் தமிழர் கட்சி ஆர்ப்பாட்டம்

● மதுராந்தகம்

செங்கல்பட்டு மாவட்டம், பவுஞ்சூர் பேருந்து நிலையம் அருகே நாம் தமிழர் கட்சியின் லத்தூர் வடக்கு ஒன்றியம் சார்பில், கள்ளக்குறிச்சி விவகாரம் தொடர்பாக, தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்து, ஒன்றிய செயலாளர் கோதண்டன் முன்னிலையில், தொகுதி செயலாளர் கிருபாகரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

இதில், திமுக ஆட்சியில் உள்ள தமிழகத்தில் போதைப் பொருட்களின் புழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மேலும், மதுபான பாட்டில்கள் அதிகாலை முதலே கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என முழக்கமிட்டனர்.

மேலும், மரக்காணம், செய்யூர் பகுதிகளில் கடந்த ஆண்டு நடைபெற்ற கள்ளச் சாராய உயிரிழப்பு சம்பவத்துக்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. அதனால், சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என அக்கட்சியினர் முழக்கமிட்டனர்.

பின்னர், தமிழக அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அக்கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கழிப்பறைக்கு செல்லும் வழியில் கட்டுமான பொருட்கள்

**▶ அச்சத்துடன் செல்லும் அரசு தொடக்க பள்ளி குழந்தைகள்**

● காஞ்சிபுரம்

திருக்காலிமேடு அரசு தொடக்கப் பள்ளியில் மாணவ, மாணவிகள் பயன்படுத்தும் கழிப்பறைக்கு செல்லும் வழியை மறைத்து, கட்டுமானப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதால் பிள்ளைகள் அச்சத்துடன் கழிப்பறைக்கு சென்று, திரும்பும் நிலை உள்ளது.

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 22-வது வார்டு திருக்காலிமேடு பகுதியில் அரசு தொடக்கப் பள்ளி உள்ளது. இப்பள்ளியில், 250-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டிடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு தேவையான கட்டுமானப் பொருட்களான செங்கல், இரும்பு கம்பிகள் ஆகியவை மாணவ, மாணவிகள் கழிப்பறைக்கு செல்லும் வழியில் வைக்கப்பட்டுள்ளன. இதனால், கழிப்பறைக்கு செல்லும்



திருக்காலிமேடு அரசு தொடக்கப் பள்ளியில் மாணவ, மாணவிகள் கழிப்பறைக்கு செல்லும் வழியை மறைத்து கட்டுமானப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

பிள்ளைகள் அச்சத்துடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பெற்றோர், அப்பகுதி இளைஞர்கள் பணியை மேற்கொண்டுள்ள ஒப்பந்ததாரரிடம் முறையிட்ட போது, பிள்ளைகள் கழிப்பறைக்கு செல்லும்போது ஆசிரியர் ஒருவர் அங்கு பாதுகாப்பாக நின்று வழி நடத்துவதாகவும் தேவைப்பட்டால் செங்கற்களின் உயரத்தை குறைப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும், எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இன்றி ஒப்பந்ததாரர் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதால், தகுந்த அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### வாலாஜாபாத்தில் வருவாய் தீர்வாயம்

# ரூ.2.22 கோடியில் நலத்திட்ட உதவி வழங்கல்

● காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய் தீர்வாயத்தில் 260 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 22 லட்சத்து 8 ஆயிரத்து 7 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த உதவிகளை மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் வருவாய் தீர்வாயம் ஜூன் 14-ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இந்த வருவாய் தீர்வாயத்தின் நிறைவு நாள் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

**உடனடி தீர்வு**

வருவாய் தீர்வாயத்தில் அளிக்கப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு இந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

170 பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்களும், 51 பேருக்கும் பட்டாவும் வழங்கப்பட்டன. மேலும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மூலம் சலவைப் பெட்டி 3 பேருக்கும், வேளாண்மைத் துறை மூலம் விவசாயத்துக்கு தேவையான உதவிப் பொருட்கள் 10 பேருக்கும், வட்டார வழங்கல் அலுவலகம் மூலம் 15 பேருக்கு ரேஷன் அட்டை உட்பட மொத்தம் 260 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நலத்திட்ட உதவிகளின் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 22 லட்சத்து 8 ஆயிரத்து 7 ஆகும். இந்த நிகழ்ச்சியில் உத்திரமேரூர் எம்எல்ஏ க.சுந்தர், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in



தாம்பரத்தை அடுத்த பெருங்களத்தூர் வட்ட பாலம் அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் திறக்கப்படும் என அப்பகுதி மக்கள் ஆவலுடன் உள்ளனர். தாம்பரத்திலிருந்து வண்டலூர் செல்லும் ஒருபகுதி பாலம் பணி நிறைவடைந்துவிட்ட நிலையில், பெருங்களத்தூரில் இருந்து நெடுங்குன்றம் செல்லும் பாலப் பணி பாதியிலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது. படம்: எம்.முத்துகணேஷ்

## சித்தூர் – தச்சூர் வரை 6 வழி சாலை விவசாய நிலங்களுக்கு செல்ல அணுகுசாலை அமைக்க கோரிக்கை

● திருவள்ளூர்

சித்தூர் முதல் தச்சூர் வரையான 6 வழிச் சாலை திட்டத்தில், விவசாய நிலங்களுக்கு செல்ல அணுகுசாலை அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், உதவி ஆட்சியர்(பயிற்சி) ஆயுஷ் குப்தா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வேதவல்லி, வேளாண்மை துறை இணை இயக்குநர் முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், வேளாண்மை- உழவர் நலத் துறை, தோட்டக்கலைத் துறை உள்ளிட்ட துறைகள் சார்பில் 21 விவசாயிகளுக்கு ரூ. 11,07,475 மதிப்பிலான கறவை மாடு கடன் உதவி, பவர் டில்லர் மற்றும் வேளாண் மற்றும் தோட்டக்கலை இடு பொருட்கள் உள்ளிட்ட அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், சித்தூர் முதல் தச்சூர் வரையான 6 வழிச் சாலை திட்டத்தில், விவசாய நிலங்களுக்கு செல்ல அணுகுசாலை அமைக்க வேண்டும், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், மத்தூர், வடமதுரை, கைவண்டூர் பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு மற்றும் மேய்க்கால் நிலம், ஏரி பாசனக் கால்வாய், தடுப்பணையில் உள்ளிட்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியரிடம் முன் வைத்தனர்.

அந்த கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, ஆட்சியர் அறிவுறுத்தினார்.

### டைம்ஸ் தரவரிசையில் ஸ்ரீசாய்ராம் குழுமத்தை சேர்ந்த

# பொறியியல் கல்லூரிகளுக்கு 2-வது இடம்

● சென்னை

பிரிட்டன் டைம்ஸ் நிறுவனம் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்வி நிறுவனங்களின் தரம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை தரவரிசைப்படுத்தி வருகிறது. அப்பட்டியலில், மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் குழுமப் பொறியியல் கல்லூரிகள் தமிழக அளவில் 2-வது இடத்தைப் பெற்றுள்ளன என்று ஸ்ரீ சாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் சாய்பிரகாஷ் லியோமுத்து தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

ஐக்கிய நாடுகள் சபை உலகில் நிலைத்த வளர்ச்சியை அனைத்து துறைகளில் ஏற்படுத்த 17 இலக்குகளை நிர்ணயம் செய்து அவற்றை சர்வதேச சமூக நலன் கருதி அனைத்து நாடுகளும் கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறது.

அந்த வகையில் பிரிட்டன் டைம்ஸ் உயர் கல்வி மதிப்பீட்டு நிறுவனம் உலகின் விலை மதிப்பற்ற சொத்தாகக் கருதப்படும் மனித வளத்தை மேம்படுத்த உறுதுணை புரியும் தரமான கல்வி வழங்கும் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை மாநில, தேசிய, உலக அளவில் தரவரிசைப்படுத்தி ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் ஐ.நா. சபையின் 4-வது இலக்கான தரமான கல்வி தரவரிசையில் தமிழக அளவில் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி 2-வது இடம், தேசிய அளவில் 13-வது இடம், உலக அளவில் 66-வது இடத்தைப் பெற்றுள்ளது.

மற்றொரு கல்வி நிறுவனமான ஸ்ரீ சாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி பொறியியல் கல்லூரி தரமான கல்விக்கான தரவரிசையில் தமிழக அளவில் 2-வது இடம், தேசிய அளவில் 17-வது இடம் மற்றும் உலக அளவில் 70-வது இடத்தைப் பெற்றுள்ளது என்றார்.

ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரிகள் முதல்வர்கள் பொற்குமரன், பழனிக்குமார், வணிக மேலாண் கல்லூரி இயக்குநர் கே.மாறன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# 22 கிலோ கஞ்சா பறிமுதல்

● திருத்தணி

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருகே பொன்பாடி சோதனை சாவடி அருகே நேற்று முன் தினம் மத்திய நுண்ணறிவுப் பிரிவின் சென்னை கோட்ட காவல் ஆய்வாளர் அன்பரசி தலைமையிலான போலீஸார் ஆந்திர பகுதியிலிருந்து, தமிழகப் பகுதிக்கு வந்த ஆந்திரா மற்றும் தமிழக பதிவெண் கொண்ட இரு மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி சோதனை செய்தனர்.

அதில் வந்த 3 பேரிடம் போலீஸார் விசாரணை நடத்தியதில், ஆந்திர மாநிலம் - புத்தூரை சேர்ந்த விஜய் (47), வேலூர், ராணிப்பேட்டை மாவட்டங்களை சேர்ந்த பிரவீன்(25), வெங்கட்(23) ஆகியோர் தமிழகத்தில் விற்பனை செய்வதற்காக, ஆந்திர மாநிலத்திலிருந்து 22 கிலோ கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது. இதையடுத்து 3 பேரும் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

# சாலை விபத்தில் 2 பேர் உயிரிழப்பு

● கேளம்பாக்கம்

ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தைச் சேர்ந்தவர் லால் பாஷா (27). இவர் கேளம்பாக்கத்தில் வாடகை வீட்டில் தங்கியபடி படூரில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் வேலை பார்த்து வந்தார்.

அதே பகுதியைச் சேர்ந்த ஹரீஷ் (19) என்பவர் அந்த பல்கலைக்கழகத்தில் 2-ம் ஆண்டு பி.இ. கணினி அறிவியல் படித்து வந்தார். இருவரும் நல்ல நண்பர்களாயினர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் கல்லூரி முடிந்ததும் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கோவளம் கடற்கரைக்கு சென்று மோட்டார் சைக்கிளில் நள்ளிரவு 12 மணிக்கு தங்களது அறை இருந்த கேளம்பாக்கத்துக்கு இருவரும் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

கோவளம் மற்றும் கேளம்பாக்கம் இடையே பக்கிங்காம் கால்வாய் அருகே வந்தபோது எதிரே வந்த காரின் கதவு திடீரென திறக்கப்பட்டதால், மோட்டார் சைக்கிள் அதன் மீது மோதியதில் இருவரும் நிலை குலைந்து கீழே விழுந்தனர்.

அப்போது காருக்குப் பின்னால் வந்த லாரியின் சக்கரம் அவர்கள் மீது ஏறியதில் உடல் நசுங்கி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் பள்ளிக்கரணை போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து இருவருடைய உடல்களையும் மீட்டு குரோம்பேட்டையில் உள்ள தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ரானே இன்ஜின் வால்வு லிமிடெட்
CIN: L74999TN1972PLC006127
பதிவு அலுவலகம்: "மைத்ரி", எண்.132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086. Tel.: 044 2811 2472 / 73
Website: www.ranegroup.com | E-mail: investorservices@ranegroup.com

பொது அறிவிப்பு - 52-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம்

இதன் மூலம் கொடுக்கப்படும் அறிவிப்பு என்னவென்றால், ரானே இன்ஜின் வால்வு லிமிடெட் ("நிறுவனத்தின்") உறுப்பினர்களின் **52-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம் (AGM) 2024 ஜூலை 23 செவ்வாய்க்கிழமையன்று பிற்பகல் 02.00 மணிக்கு** வீடியோ கான்பரென்ஸ் / பிற ஆடியோ விஷுவல் மூலம் நடைபெறும்.

பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் ("MCA") 2023 செப்டம்பர் 25 தேதியிட்ட அதன் சுற்றறிக்கையை இது தொடர்பாக முந்தைய சுற்றறிக்கைகளுடன் படிக்கையில், (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது) வீடியோ கான்பரென்ஸ் / பிற ஆடியோ விஷுவல் மூலம் வருடாந்திரப் பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதித்துள்ளது மற்றும் செக்யூரிட்டீஸ் & எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா ("SEBI") அதன் 2023 அக்டோபர் 07 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி வருடாந்திர அறிக்கையின் கடின நகலை அனுப்புவதற்கு தளர்வு அளித்துள்ளது (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது).

அதன்படி நிறுவனத்தின் 52வது வருடாந்திர பொதுக்குழு கூட்டமானது, VC/OAVM மூலம் கூட்டப்படும் மற்றும் வணிகமானது பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") விதிகளுக்கு இணங்க மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் பரிவர்த்தனை செய்யப்படும். **கட்-ஆஃப் தேதி, அதாவது 2024 ஜூலை 16 செவ்வாய்க்கிழமை அன்று,** உறுப்பினர்களின் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ ஒரு நபர் பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே 'ரிமோட் மின்-வாக்களிப்பு' அல்லது வாக்களிப்பினை, வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் செலுத்துவதற்கு தகுதியுடையவர் ஆவார். வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் வாக்களிப்பது அல்லது வாக்களிக்கும் வசதிக்காக நிறுவனமானது மத்திய டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்தினை, மின்னணு வழிகளில் வாக்களிக்க வசதியாக, அதாவது ரிமோட் மின்-வாக்களிப்பு மற்றும் AGM தேதியில் வாக்களிப்பதற்கான சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் சட்டத்தின் பிரிவு 108, நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 மற்றும் SEBI LODRன் படி, நிதியாண்டு 2023-24க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் 52வது AGMன் அறிவிப்பினை நிறுவனம் / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் மின்னஞ்சல் முகவரி பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்படுகிறது. மேலே உள்ள ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com என்ற இணையதளத்திலும், BSE லிமிடெட் இணையதளமான www.bseindia.com, தேசிய பங்குச் சந்தை இந்தியா லிமிடெட் இணையதளம் www.nseindia.com மற்றும் CDSL இணையதளம் https://www.evotingindia.com மூலம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு இதன்மூலம் தெரிவிப்பது என்னவென்றால்:

(i) "தொலை மின்னணு வாக்களிப்பு" காலம் **2024 ஜூலை 20, சனிக்கிழமை அன்று (காலை 9:00 மணி) முதல் 2024 ஜூலை 22, திங்கட்கிழமை அன்று (மாலை 5.00 மணி) வரை.** உறுப்பினர்களின் குறிப்பிற்கு மேற்கூறிய காலத்திற்கு பிறகு மின்-வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) இந்த காலகட்டத்தில், வரம்புத் தேதி **2024 ஜூலை 16, செவ்வாய்க்கிழமை அன்று** இருக்கும் அங்கத்தினர்கள் மற்றும் புதிய பங்குதாரர்கள் பிசிகல் வடிவம் அல்லது டிமடீரியல் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

(iii) தொலை மின்-வாக்களிப்பு மூலம் வாக்களித்த அங்கத்தினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் நடைபெறும் வாக்களிப்பில் வாக்களிக்க இயலாது.

(iv) உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறைக்கான இணைய இணைப்பு : https://www.evotingindia.com-ல் shareholders/members loginயை இயக்கலாம். AGMல் இணைவதற்கும் அதே லிங்க் செல்லுபடியாகும். ரிமோட் மின்-வாக்களிப்பு செயல்முறை, AGMல் இணைவது மற்றும் AGMஇன் போது மின்-வாக்குப்பதிவு பற்றிய விரிவான வழிமுறைகள் AGM அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(v) டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்யப்படாத உறுப்பினர்கள் மின் வாக்களிப்பதற்கான உள்நுழைவு சான்றுகளைப் பெறுவதற்கு வருடாந்திரப் பொதுக் கூட்ட அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி தேவையான விவரங்களையும் ஆவணங்களையும் நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி investorservices@ranegroup.com அல்லது RTA மின்னஞ்சல் முகவரி srirams@integratedindia.in அனுப்புமாறு கோரப்படுகிறது.

(vi) திரு. பாலு ஸ்ரீதர், பயிற்சி நிறுவன செயலாளர் (ICSI உறுப்பினர் எண். FCS 5869), தொழில் கூட்டாளி, M/s. A.K. ஜெயின் & அசோசியேட்ஸ், நிறுவன செயலாளர்கள், 'ரிமோட் மின்-வாக்களிப்பு' செயல்முறை மற்றும் AGMல் வாக்களிப்பதை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்பவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(vii) உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ஈவுத்தொகைகளைப் பெறுவதற்கான ஆணையை மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் அந்தந்த வைப்புத்தொகை பங்கேற்பாளர்கள் (டிமேட் வைத்திருப்பவர்களுக்கு) / RTA அல்லது நிறுவனம் (பிசிகல் ஹோல்டிங் வைத்திருப்பவர்கள்) வரம்பு தேதி 2024 ஜூலை 15, திங்கட்கிழமை அல்லது அதற்கு முன் புதுப்பிக்கலாம். வருமான வரிச் சட்டம், 1961ன்படி, பொருந்தக்கூடிய இடங்களில் டி.டி.எஸ் கழிக்கப்படும்.

(viii) தங்கள் கேஒய்சி விவரங்களைப் புதுப்பிக்காத பங்குதாரர்கள் மின்னஞ்சல் மற்றும் பிற கேஒய்சி விவரங்களைத் தங்கள் டெபாசிட்டரிகளுடன் (டிமேட் ஹோல்டிங்கிற்காக) அல்லது நிறுவனம் / RTA (பிசிகல் ஹோல்டிங்கிற்காக) பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது தொலைநிலை மின்-வாக்களிப்பு / மின்-வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் வினவல் / தெளிவுபடுத்துதல் அல்லது சிக்கல்களுக்கு www.evotingindia.com என்ற இணையதளத்தில் Help பகுதியின் கீழ் அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள் (FAQ's) மற்றும் மின்-வாக்களிப்பு கையேடு காணலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சலுக்கு எழுதவும் அல்லது திரு. ராகேஷ் தல்வி (மூத்த மேலாளர், CDSL)-யை 1800 22 55 33 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

(இயக்குனர் குழு உத்தரவுப்படி)
ரானே இன்ஜின் வால்வு லிமிடெடுக்காக
எஸ் ஆனந்த்
செயலாளர்
இடம் : சென்னை
தேதி : ஜூன் 27, 2024

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I Harikumar S/O, Sasikala R/o B1201, 12th Floor, Pride Towers, Pacifica Aurum, Omr, Padur, Chennai 603103 have changed my name to Harikumar Ganesan.

I,Nitya Vijaykumar D/o Vijaykumar R/o 70/34 A Ormes Road,Kilpauk, Chennai,have changed my name to Dhanya.

I,Tamil Selvi wife of Army No JC671505X Subedar/ Clk(SD) M Suresh unit HQ Dakshin Bharat Area, C/o 56 APO have changed my name from Tamil Selvi to Tamilselvi Suresh vide affidavit No DC021955 date 03 May 2024

பொது

பொது அறிவிப்பு

IN THE COURT OF THE I ADDL. HON'BLE CITY CIVIL AND SESSIONS JUDGE AT BANGALORE. (CCH-02)
P & SC. No. 238/2024
BETWEEN : 1. Mr. K. Sriram Kumar, Son of V. Krishnan, Aged about 48 years, Residing at No. 21, 9th Cross, Akshaya Nagar 2nd Block, Ramamurthy Nagar, Bangalore-560016.
2. Mrs. Srividya Krishnan, Daughter of V. Krishnan, Aged about 49 years, Residing at No. 201, Crocus Court, Dayton, NJ, 08810, USA.
(Represented by her brother) : Mr. K. Sriram Kumar, Son of V. Krishnan,
3. Mrs. Sripriya Lakshmi Narasimhan, Wife of Lakshmi Narasimhan, Daughter of V. Krishnan, Aged about 52 years, Residing at No. 117, 40 Feet Road, Krishna Nagar, Perumbakkam, Kancheepuram, Tamil Nadu - 600100. ...Petitioners
AND : NIL ...Respondent
PUBLIC NOTICE
Whereas the petitioners have filed the above petition under section 372 of the Indian succession Act, seeking that, 1. K. Sriram Kumar, 2. Mrs. Srividya Krishnan, (Represented by her brother) Mr. K. Sriram Kumar, 3. Mrs. Sripriya Lakshmi Narasimhan herein be declared as the legal heir and also claim.
The court has fixed the **23rd day of JULY 2024 at 11.00 AM** for hearing the aforementioned petition. Interested persons may enter appearance on that day and file objections if any, failing which the matter will be heard and determined ex-parte.
SCHEDULE PROPERTY
INDIAN BANK at Medavakkam, Chennai Branch - 600100 Account bearing number - 403681731 of Rs. 1,19,836 (ONE LAKH NINETEEN THOUSAND EIGHT HUNDRED AND THIRTY-SIX RUPEES ONLY)
Account bearing number - 6300036192 of Rs. 76,930/- (SEVENTY-SIX THOUSAND NINE HUNDRED AND THIRTY RUPEES ONLY) and
Account bearing number 6380913514 of Rs. 72,059/- (SEVENTY-TWO THOUSAND FIFTY-NINE RUPEES ONLY).
Given under my hand seal and of the court, this 14.06.2024.
By Order of the Court, Senior Sheristedar, City Civil Court, Bengaluru
M/s. Aryan Law
Advocates and Solicitors
No. 2722, New Thippasandra Main Road, HAL 3rd Stage, Bangalore-560075.
Mob : 9738256648
Email : aryanlawblr@gmail.com

PUBLIC NOTICE
THIS IS TO GENERAL PUBLIC, That My CLIENT Mr.R.SESHADRI, son of Rengaswamy, Residing at New No. 12, Old No.35, Nachiappan street, mahalingapuram, Nungambakkam, Chennai-600034, have lost his Land property original Sale deed bearing Registered Document No: 5383/2010 on the file of the Sub Registrar office PADAPPAI, which was lost on 17-6-2024 at Nungambakkam Near his house. Finder is requested to handover the same to my Client above said address and his cell phone No: 9444022234.
V.ARIVAZHAKAN, M.A., B.L.,
Advocate & Notary Public Govt of India
No.207, New Addl. Law Chambers
High Court Building, Chennai-104
Cell No. 9840397308



Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at THG PUBLISHING PVT.LTD., Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

CH-KP